NEW CENTURY TAMIL STORY READER

FIRST READER

REVISED EDITION

முதலாவது

கதா வாசக புஸ்தகம்

BY

T. A. RAJARUTHNAM PILLAY

9 4 APR 1924

THE CHRISTIAN LITERATURE SOCIETY
FOR INDIA

MADRAS ALLAHABAD RANGOON COLOMBO

1924

494.81186
1560

TB
.031,3(1)
N24

C. L. S. PRESS, MADRAS—1924

85220

முகவுரை

கல்வியிலும் மேலான செல்வம் வேறில்லையென்பதும், பாலப் பருவமே வித்தியாரம்பத்திற்கேற்ற காலமென்பதும் அனைவரும் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம். ஆயினும் அப்பாலருக்குக் கல்வி பயிற்றும் முறையைப்பற்றிப் பலரும் பலவித அபிப்பிராயமுடையவராய் இருக்கின்றனர். தமிழ்ப் பாஷையிலுள்ள எழுத்துக்களையெல்லாம் அப்பியாசஞ் செய்தபின்னரே பிள்ளைகள் வாசிக்க ஆரம்பிக்கவேண்டுமென்பதும், பெருங் கூச்சலிட்டு அவர்கள் அக்ஷராப்பியாசஞ் செய்யும்படி செய்வதும் பழைய காலத்து உபாத்திமாரின் வழக்கம். அம்முறையைக் கைக்கொண்டால் எழுத வாசிக்க ஒரு வருஷம் செல்லும். நாம் இப்புஸ்தகத்தில் காட்டியுள்ள முறையை அனுசரித்தால் சுமார் ஆறு மாதத்தில் எழுத வாசிக்கக் கற்றுக்கொள்ளலாம்.

பாலருக்குக் கல்வி பயிற்றுவது சுலபமான விஷயமல்ல. அவர்கள் ஏறக்குறைய ஒரு வயது முதல் தம்மைச் சுற்றியுள்ள வஸ்துக்களைப் பார்க்கவும் அவ்வஸ்துக்களின் பேரை மழலை வார்த்தையால் சொல்லவும், அவை சம்பந்தமாகப் பெற்றாரோடு சம்பாஷிக்கவும் பிரயத்தனப்படுகின்றனர். இது பாலியரின் இயல்பு. இக்காலத்தில் பெற்றோர் அவர்களை உற்சாகப்படுத்தி புதிய வஸ்துக்களை அவர்கள் காணவும் அவை இன்ன வஸ்துக்களென்று அவற்றின் பெயரைச் சொல்லவும் சம்பாஷிக்கவும செய்யவேண்டியது அவசியம்.

குழந்தைகள் பாடசாலைக்குப் போக ஆரம்பிப்பதற்குமுன் வார்த்தைகளை நன்றாய் உச்சரிக்கவும், சம்பாஷிக்கவும் பெற்றோரே கற்றுக்கொடுக்கவேண்டும். இதன்பின்தான் அவர்கள் பாடசாலைக்குப் போகத் தக்கவராவார்கள்.

உபாத்தியாயர் குழந்தைகளிடத்தில் மிக்க அன்புடையவராய் இருத்தல்வேண்டும். அவர்களுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயங்களைக்கொண்டு தெரியாத விஷயங்களைக் கற்றுக்கொடுக்கவேண்டுமே தவிர, கடுகடுத்துச் சிடுசிடுத்து மனதில் பயத்தை யுண்டாக்கி விரைவிற் கற்றுக்கொடுக்கப் பிரயாசப்படக் கூடாது.

கதாவாசக புஸ்தகத் தொடரின் முதற் புஸ்தகமாகிய இச்சிறு புஸ்தகத்தில், சிறுவர்கள் சுலபமாய் எழுதவும் படிக்கவும் கூடிய ஈ, ட, ப, ம, ய, ர, ழ முதலிய எழுத்துக்களை முதலில் அப்பியாசித்து அவ்வெழுத்துக்கள் சம்பந்தமான வார்த்தைகளைச் சொல்லவும் எழுதவும் வழிகாட்டி யிருக்கிறோம். அப்பால் பிள்ளைகள் ஒருவாறு சில எழுத்துக்களை எழுதக் கற்றுக்கொண்டபின் மற்றைய மெய்யெழுத்துக்களையும் உயிரெழுத்துக்களையும் கற்கச் செய்தபிறகு உயிர்மெய் யெழுத்துக்களில் அப்பியாசித்து, இன்னின்ன அடையாளங்களை உபயோகிப்பதினால் உயிர்மெய் யெழுத்துக்கள் உண்டாகின்றன என்பதை விளக்கி அவற்றை எவ்வாறு எழுதவேண்டுமென்று காட்டியிருக்கின்றோம். இவ்வாறு கற்பிப்பதே சுலபமான முறை யென்பது தேர்ந்த உபாத்திமாருடைய அபிப்பிராயம்.

எழுத்துக்களைக் கற்பிக்கும்போது உபாத்தியாயர் சிறு குச்சிகளையாவது விதைகளையாவது உபயோகப்படுத்தும்படி பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பது நலம். உதாரணமாக, ஈ என்ற எழுத்தைக் கற்றுக்கொடுப்பதற்கு உபாத்தியாயர் பிள்ளைகளிடத்தில் சில விதைகளைக் கொடுத்து அந்த எழுத்தைப்போல அடுக்கும்படி செய்யவேண்டும். விதைகளை  இவ்விதமாக அடுக்கலாகும். இப்படியே மற்றைய எழுத்துக்களையும் கற்பிக்கலாகும்.

குச்சிகளை உபயோகப்படுத்தும்போது உபாத்தியாயர் ஒவ்வொரு பிள்ளையிடத்திலும் மூன்று அல்லது நாலு அங்குலமுள்ள குச்சிகளைக் கொடுத்து அவைகளை ஒன்றோடொன்று சேர்த்து வைப்பதினால் எழுத்துக்கள் உண்டாகிற விபரத்தைக் கற்பிக்கவேண்டியது. உதாரணமாக, நிலத்தில் ஒரு குச்சியை நேராகவும் இன்னொரு குச்சியைக் குறுக்காகவும் வைப்பதினால் ட என்ற எழுத்தும் ஒரு குச்சியை நேராகவும் இரண்டு சிறு குச்சிகளை இரண்டு அந்தத்தில் குறுக்காகவும் வைப்பதினால் ப என்ற எழுத்தும் உண்டாகிறதென்றும் கற்பிக்கலாம். இவ்விதமாக எழுத்துக்களின் உருவத்தை விதைகள் மூலமாகவாவது குச்சிகள் மூலமாயாவது பிள்ளைகள் தெரிந்துகொண்டபின் கற்பலகையில் கோடு கிழித்து அவ்வெழுத்துக்களை எழுதவும் திருத்தமாக உச்சரிக்கவும் பழக்கவேண்டும். இவ்விதமாய் முதலில் சுலபமான எழுத்துக்களைக் கற்பித்து இப்புஸ்தகத்தில் காட்டியிருக்கிற வரிசைக் கிரமப்படி இன்னின்ன அடையாளங்களைச் சேர்ப்பதினால் இன்னின்ன உயிர்மெய் யெழுத்துக்கள் உண்டாகின்றனவென்று பிள்ளைகள் மனதில் பதியுமாறு செய்யவேண்டும். பின்வரும் அடையாளங்களைப் பிள்ளைகள் கவனிக்குமாறு செய்யவேண்டியது அவசியம்.

ஆ = ா, ‿. கா, ணா	எ = ெ. கெ
இ = ி, ‿. கி, டி	ஏ = ே. கே
ஈ = ீ. கீ	ஐ = ை, ‿. கை, லை
உ = ு, |. ு, கு, சு, று.	ஒ = ொ, ெ‿. கொ, ணொ
ஊ = ூ, ூ, ூ, ூ. கூ, சூ, ரூ, தூ.	ஓ = ோ, ே‿. கோ, ணோ.

ஔ = ௌ, கௌ

பிள்ளைகள் இவ்வாறு எழுத்துக்களையும் அவை சம்பந்தமாய் நாம் காட்டியுள்ள சொற்களையும் அப்பியாசித்தபின்னர், ஓரெழுத்துச் சொற்கள், ஈரெழுத்துச் சொற்கள், பலவெழுத்துச் சொற்கள் அவைகளாலாகிய சொற்றொடர்கள் முதலிய சிறு வாக்கியங்களில் பயிலும் வண்ணம் அத்தகைய வாக்கியங்களை அமைத்துள்ளோம். அப்பால் படிப்படியாக சிறு பாடங்களை வாசிக்க இப்புஸ்தகம் வழி காட்டுகின்றது. ஆகையால் இப்புஸ்தகத்தை உபயோகப்படுத்தும் உபாத்திமார் முதல் ஆறு மாதத்தில் பிள்ளைகள் எழுத்துக்களையும் சிறு வார்த்தைகளையும் எழுதவும் வாசிக்கவும் கற்றுக்கொண்டிருப்பதையும் பிறகு தொடர்ச்சியாய் எழுதப்பட்டுள்ள சிறு பாடங்களைப் படிப்பதினால் வருஷ முடிவில் நன்றாய் வாசிக்கவும், எழுதவும் சக்தியுடையவர்களாவதையும் காண்பார்கள். இவ்வித நோக்கத்தோடு நவீனமாய் தக்க போதனா முறையைத் தழுவி இயற்றி வெளியிடும் இச்சிறு புஸ்தகம் பாலர்களுக்குப் பெரும் பயனை விளைவிக்குமென்று எதிர்பார்க்கின்றோம் இதன்கண் ஏதாவது குறைகள் இருப்பினும் சகல வித்தியாபிமானிகளும், உபாத்திமாரும் பாலியர்களின் பெற்றோரும் நல்வரவு கூறி அங்கீகரிப்பரென்றெண்ணுகின்றோம்.

‘குற்றம் களைந்து குணங்கொள்வ தெஞ்ஞான்றும்
கற்றறிந் தோர்தங் கடன்’

T. A. R.

1. உயிர் எழுத்துக்கள் கஉ.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ

ஐ ஒ ஓ ஔ

உ. மெய் எழுத்துக்கள் கஅ.

க ங ச ஞ ட ண

த ந ப ம ய ர

ல வ ழ ள ற ன

---

3. ஆய்த எழுத்து க.

ஃ



1. 2. 1. 2. 1. 2.



பட்டம்.

ட ட ப ம ப

ட ட் ப ப் ம ம்

படம்	மடம்
பட்டம்	மட்டம்
பட பட	மட மட
படம்	மடம்

2. 3. 2. 3. 2. 3.



பழம்

ம ழ ழ ப ய ய ழ் ய்

ய ய் ழ ழ்

ப்ழ	பழம்
ம்ழ	மழ
ப்ய	பயம்
ம்ய	மயம்

3. 4. 3. 4. 3. 4.



கயம்

ர ச க த த க் த்

க க் த த்

கய	கயம்
தட	தடம்
கர	கரம்
தர	தரம்

4. 5. 4. 5. 4. 5.



கலம்

வயல்

ெ ல . ெ வ ல வ

ல ல் வ வ்

கல	கலம்
நல	நலம்
வல	வலம்
பல	பலம்
கடல்	படல்

5. 6. 5. 6. 5. 6.



மஞ்சம்



சட்டம்

ர ச ச ஞ ஞ ஞ

ச ச் ஞ ஞ்

சட	சட்டம்
ஞய	ஞயம்
சர	சரம்
மஞ்சம்	தஞ்சம்

6. 7. 6. 7. 6. 7.

நகரம்

ா ந ந ந ந ங

ந ந் ங ங்

நகரம்	தகரம்
நய	நயம்
தங்கம்	பங்கம்
நத்தம்	பத்தம்
அங்கம்	வங்கம்

7\. 8. 7. 8. 7. 8.

ெ ஸ ன ண

ன ன் ண ண்

வனம்	மனம்
தணல்	சணல்
பணம்	மணம்
மரணம்	கணம்

8 9. 8. 9. 8 9.



பவளம்

ெ ள ள ா ற ற

ள ள் ற ற்

கள	களம்
மற	மறம்
பள்ளம்	கள்ளன்
வற்றல்	கற்றல்
பவளம்	தளவம்

9. 10. 9. 10. 9. 10.



அகம்

ஃ அ ஆ ஆ அ

ஆ = ா,

அகம்	அகல்
அவன்	ஆ
அப்பம்	ஆலயம்
ஆணவம்	ஆவல்
அரசன்	ஆனந்தம்

க் + ஆ = கா. ண் + ஆ = ணா

ன் + ஆ = னா.

10. 11. 10. 11. 10. 11.





இதழ் ஈக்கள்

இ ா ஈ இ ஈ

இ = ; ஈ =

இதழ்	ஈக்கள்
இவன்	ஈசல்
இடம்	ஈட்டம்
இயல்	ஈயம்
ஈசன்	ஈரம்

க் + இ = கி; ட் + இ = டி

க் + ஈ = கீ; ட் + ஈ = டீ

11. 12 11. 12. 11. 12.

உளி

ஊஞ்சல்

உ உ ஊ ஊ

உ = (ı ஹ ; ஊ = உ ஹ ெ ஹா

உடல்	உளி
உளம்	ஊக்கம்
உன்	ஊண்
உங்கள்	ஊதல்
உமி	ஊஞ்சல்

க் + உ = கு ; ச் + உ = சு ; ர் + உ = ரு

ற் + உ = று

க் + ஊ = கூ ; ச் + ஊ = சூ ; ர் + ஊ = ரூ

த் + ஊ = தூ

ஏடு



ஏணி

எ எ எ ஏ ஏ

எ = ெ ; ஏ = ே

எரு	ஏணி
எழுத்து	ஏக்கம்
ஏடு	எச்சம்
எண்கள்	எண்ணம்

க் + எ = கெ ; க் + ஏ = கே

ஐயங்கார்

ஏ ஐ ஐ ஐ ஐ

ஐ = ை; உ

ஐயங்கார்
ஐவேசு
ஐவர்
ஐயன்
ஐயம்

க் + ஐ = கை ; ண் + ஐ = ணை



ஒட்டை



ஓடம்

ஐ ஒ ஒ ஓ ஓ

ஒ = ெ—ா ; ெ—ா, ஓ = ே—ா ; ே—ா

ஒட்டை	ஓடம்
ஒப்புரவு	ஓலை
ஒப்பம்	ஓசை
ஒருவன்	ஓட்டம்
ஒட்டியாணம்	ஓதல்

க் + ஒ = கொ ; ண் + ஒ = ணொ

க் + ஓ = கோ ; ண் + ஓ = ணோ

ஔவை.

ஔ. ஔ ஃ ஃ

ஔ ; டௌ ; ஃ ; ஆயுதம்

ஔவை

ஔவியம்

ஔடதம்

ஔபாசனம்

அஃகம்

க் + ஔ = கௌ

புஷ்பம்

ஜ ஜ், ஸ ஸ், ஷ ஷ், க்ஷ க்ஷ்
ஹ ஹ்

ஜனம்	புஸ்தகம்	விவாஹம்
ஜீவன்	பக்ஷணம்	ஹாரம்
வருஷம்	க்ஷாமம்	ஹீனம்
புஷ்பம்	பக்ஷி	ஹோரம்
ஸ்தலம்	க்ஷேமம்	க்ஷௌரம்

1 அதிக ஜனம்
2 மனுஷ ஜீவன்
3 புதிய ஸ்தலம்
4 நல்ல புஷ்பம்
5 பெரிய அக்ஷரம்

உயிர் மெய்

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ
க	கா	கி	கீ	கு	கூ	கெ
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ
ச	சா	சி	சீ	சு	சூ	செ
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ
ட	டா	டி	டீ	டு	டூ	டெ
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ
த	தா	தி	தீ	து	தூ	தெ
ந	நா	நி	நீ	நு	நூ	நெ
ப	பா	பி	பீ	பு	பூ	பெ
ம	மா	மி	மீ	மு	மூ	மெ
ய	யா	யி	யீ	யு	யூ	யெ
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ
ல	லா	லி	லீ	லு	லூ	லெ
வ	வா	வி	வீ	வு	வூ	வெ
ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ
ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ
ற	றா	றி	றீ	று	றூ	றெ
ன	னா	னி	னீ	னு	னூ	னெ

தமிழில் வழங்கும்

ஜ	ஜா	ஜி	ஜீ	ஜு	ஜூ	ஜெ
ஸ	ஸா	ஸி	ஸீ	ஸு	ஸூ	ஸெ
ஷ	ஷா	ஷி	ஷீ	ஷு	ஷூ	ஷெ
க்ஷ	க்ஷா	க்ஷி	க்ஷீ	க்ஷு	க்ஷூ	க்ஷெ
ஹ	ஹா	ஹி	ஹீ	ஹு	ஹூ	ஹெ

ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ
கே	கை	கொ	கோ	கௌ	க்
ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ	ங்
சே	சை	சொ	சோ	சௌ	ச்
ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ	ஞ்
டே	டை	டொ	டோ	டௌ	ட்
ணே	ணை	ணொ	ணோ	ணௌ	ண்
தே	தை	தொ	தோ	தௌ	த்
நே	நை	நொ	நோ	நௌ	ந்
பே	பை	பொ	போ	பௌ	ப்
மே	மை	மொ	மோ	மௌ	ம்
யே	யை	யொ	யோ	யௌ	ய்
ரே	ரை	ரொ	ரோ	ரௌ	ர்
லே	லை	லொ	லோ	லௌ	ல்
வே	வை	வொ	வோ	வௌ	வ்
ழே	ழை	ழொ	ழோ	ழௌ	ழ்
ளே	ளை	ளொ	ளோ	ளௌ	ள்
றே	றை	றொ	றோ	றௌ	ற்
னே	னை	னொ	னோ	னௌ	ன்

வட எழுத்துக்கள்

ஜே	ஜை	ஜொ	ஜோ	ஜௌ	ஜ்
ஸே	ஸை	ஸொ	ஸோ	ஸௌ	ஸ்
ஷே	ஷை	ஷொ	ஷோ	ஷௌ	ஷ்
க்ஷே	க்ஷை	க்ஷொ	க்ஷோ	க்ஷௌ	க்ஷ்
ஹே	ஹை	ஹொ	ஹோ	ஹௌ	ஹ்



ஓரெழுத்துச் சொற்கள்	ஈரெழுத்துச் சொற்கள்	மூன்றெழுத்துச் சொற்கள்
ஆ	கண்	அம்மா
ஈ	காது	அப்பா
ஊ	வாய்	பிள்ளை
கா	பல்	பாதம்
நா	மணி	குடம்
வா	அடி	குதிரை
கை	மாடு	சுவாமி
வை	ஆடு	கோயில்
நீ	கொடு	வயல்
போ	பால்	கிணறு
பூ	பொன்	தம்பி
தீ	தாய்	அக்கா

உபாத்தியாயருக்குக் குறிப்பு.—இவ்விதமான வேறு சொற்களை, பிள்ளைகளே சொல்லுமாறு உபாத்தியாயர் செய்தல் வேண்டும்.

நான்கெழுத்துச் சொற்கள்	ஐந்தெழுத்துச் சொற்கள்
அரசன்	சந்திரன்
கடவுள்	ஒட்டகம்
எழுத்து	மாணாக்கன்
வட்டம்	புத்தகம்
மனிதன்	சத்திரம்
தண்ணீர்	சர்க்கரை
சூரியன்	கங்கணம்
பாடசாலை	சத்தியம்
நாற்காலி	வித்துவான்
குழந்தை	பாத்திரம்
தங்கம்	திறவுகோல்
அன்னம்	பத்தியம்

1. ஒரெழுத்துச் சொற்றொடர்கள்

1	நீ வா	6	பை தை
2	தா கா	7	ஓ போ
3	கை வை	8	பூ தா
4	பூ தை	9	நீ தை
5	சீ போ	10	நீ வா

2. இரு சொற்றொடர்கள்

1 ஒரு தலை

2 இரண்டு கண்

3 இரண்டு கை

4 இரண்டு மூக்கு

5 இரண்டு கால்

6 ஒரு கடவுள்

7 கூரை வீடு

8 பால் கற

9 என் மாடு

3. மூன்று சொற்றொடர்கள்

1 இது என் மணி

2 எது உன் பசு?

3 இது யார் வீடு?

4 என் புது மணி

5 ஒரு மணி அடி

6 ஒரு படி நெய்

7 நாலு வீசை காய்

8 அது என் மாடு

9 இது என் வீடு

4. பல சொற்றொடர்கள்

1 அண்ணா அவன் முகம் பாரும்

2 பத்து ரூபாய் தாரும்

3 அவன் பெயர் என்ன?

4 உன் பாடம் சொல்லு

5 இந்த பூவின் நிறம் என்ன?

6 நல்ல குணம் உள்ள பிள்ளை

7 பாலும் தேனும் சாப்பிடு

8 அவன் நல்ல பிள்ளை

5. பிராணிகளின் தொனி

நாய் குலைக்கும்

பூனை சீறும்

வாத்து குவாக் என்று கத்தும்

காக்கை கரையும்

எருது தொணுப் போடும்

நரி ஊளையிடும்

ஆடு கத்தும்

பசு கதறும்

குதிரை கனைக்கும்

சேவல் கூவும்

பாம்பு சீறும்

தேனீ இரையும்

6. பதார்த்தங்களின் குணம்

1 சர்க்கரை தித்திக்கும்

2 வேம்பு கசக்கும்

3 பால் இனிக்கும்

4 மோர் புளிக்கும்

5 மிளகாய் உறைக்கும்

6 உப்பு உவர்க்கும்

7. பாலர் நீதி

1 கடவுளை வணங்கு

2 தர்மம் செய்

3 கோபம் கொள்ளாதே

4 பொய் சொல்லாதே

5 களவு செய்யாதே

6 பாவம் செய்யாதே

7 பிராணிகளை வதைக்காதே

8 பெற்றோருக்கு கீழ்ப்படி

9 கள் குடியாதே

10 உண்மை பேசு

8. தொழிலாளிகள்

1 பெட்டி செய்பவன் தச்சன்

2 நகை செய்பவன் தட்டான்

3 கத்தி செய்பவன் கருமான்

4 சட்டி செய்பவன் குயவன்

5 கூடை முடைபவன் மேதரவன்

6 துணி வெளுப்பவன் வண்ணான்

7 சவரம் செய்பவன் அம்பட்டன்

8 துணி நெய்பவன் சேணியன்

9 பாட்டு பாடுபவன் பாடகன்

10 பாடம் படிப்பவன் மாணாக்கன்.



9. மிருகங்களின் உபயோகம்

1 பசு பால் தரும்
2 எருது வண்டி இழுக்கும்
3 எருது ஏரும் இழுக்கும்
4 குதிரை சவாரி போகும்
5 ஒட்டகம் பாரம் சுமக்கும்
6 பூனே எலி பிடிக்கும்
7 கழுதை துணி சுமக்கும்
8 நாய் வீடு காக்கும்
9 தேனீ தேன் தரும்
10 ஆடு பால் கொடுக்கும்
11 கோழி முட்டை தரும்
12 மயில் இறகு தரும்
13 நாவி புனுகு தரும்
14 யானை தந்தம் தரும்



10. பலவித வஸ்துக்களின் தொழில்

1 சூரியன் உஷ்ணம் ஆனது
2 சந்திரன் குளிர்ச்சி ஆனது
3 சூரியன் வெளிச்சம் தருகிறது
4 பூமி சுற்றுகிறது
5 காற்று வீசுகிறது
6 மழை பெய்கிறது
7 இடி இடிக்கிறது
8 ஆறு பாய்கிறது
9 புல் முளைக்கிறது
10 காய் காய்க்கிறது
11 பழம் பழுக்கிறது
12 பயிர் விளைகிறது
13 புஷ்பம் புஷ்பிக்கிறது
14 இலைகள் அசைகிறது

11. அவயவங்கள்

1 கண்ணினல் காண்கிருேம்
2 காதினல் கேட்கிருேம்
3 மூக்கினல் முகருகிருேம்
4 வாயினல் பேசுகிருேம்
5 நாவினல் ருசிக்கிருேம்
6 கையினல் வேலை செய்கிருேம்
7 காலினல் நடக்கிருேம்
8 பல்லினல் கடிக்கிருேம்
9 கண் இல்லாதவன் குருடன்
10 காது கேளாதவன் செவிடன்
11 வாய் பேசாதவன் ஊமை
12 கால் இல்லாதவன் முடவன்
13 கை இல்லாதவன் மொண்டி
14 மூக்கு இல்லாதவன் மூக்கறையன்



12. கடவுள்

1. இராமன். அப்பா! இது என்ன?
2. தகப்பன். மகனே! இது ஒரு மரம்.
3. இராமன். இது எப்படி வந்தது?
4. தகப்பன். இது வித்திலிருந்து முளைத்தது.
5. இராமன். வித்து என்றால் என்ன?
6. தகப்பன். வித்து என்றால் விதை; அதைப் பூமியில் புதைத்தால் அது முளைத்து மரமாகிறது.
7. இராமன். அதை மரம் ஆக்கினது யார்?
8. தகப்பன். கடவுள்.

TB
031,3(1)
N24

9. இராமன். கடவுள் யார்? அவர் எங்கே இருக்கிருர்?

10. தகப்பன். அவர்தான் இந்த உலகத்தைச் சிருஷ்டித்தவர். அவர் எங்கும் இருக்கிருர்.

11. இராமன். அவர் விதையை எப்படி மரமாக்கிஞர்?

12. தகப்பன். அவர் விதையிலிருந்து முளை உண்டாகும்படி செய்தார். அந்த முளை பருத்து மரமாவதற்கு வேண்டியதை அவர் கொடுக்கிருர்.

13. இராமன். விதை முளைத்து மரமாவதற்கு வேண்டியது என்ன?

14. தகப்பன். பனியும் மழையும் வெயிலும்.

15. இராமன். அவை எங்கேயிருந்து வருகின்றன?

16. தகப்பன். கடவுள் அவைகளைக் கொடுக்கிருர். அவர் மரத்தைக் காப்பாற்றுகிருர். அதிலே புஷ்பம் உண்டாகவும் காய் காய்க்கவும் செய்கிருர்.

17. ஒரே ஒரு கடவுள் உண்டு. அவரை ஒரு போதும் மறவாதே.

கடவுளை வணங்கு.

85220

13. ஜார்ஜ் ராஜா

1. பிள்ளைகளே? இவர் யார் என்று நீங்கள் சொல்லுவீர்களா? இவர் தான் நமது ராஜா. இவருக்கு ஐந்தாம் ஜார்ஜ் என்று பெயர். இவர் இப்போது நம்மை ஆண்டுவருகிறார். இவருக்கு முன் நமது ராஜாவாக இருந்தவருக்கு எட்வர்ட் ராஜா என்று பெயர். அவர் மிக்க அன்பும் பொறுமையும் உடையவர். அவருடைய மகன் தான் இவர்.

2. இவருடைய மனைவிக்கு மேரி ராணி என்று பெயர். அந்த அம்மாள் தான் நமது ராணி. நமது ராணியும் அரசரும் இந்தியாவுக்கு இரண்டு முறை வந்திருக்கிறார்கள். இளவரசராக இருக்கும்போது முதல் முறை வந்தார்; ராஜாவானபின்பு இரண்டாவது முறை வந்து டில்லியில் பட்டாபிஷேகம் செய்தார்.

3. நமது அரசருக்கு ஐந்து புத்திரரும் ஒரு புத்திரியும் உண்டு. மூத்த குமாரன் இவருக்குப் பின் நமது ராஜா ஆவார். அவருக்கு உவேல்ஸ் இளவரசர் என்னும் பட்டப்பெயர் உண்டு.

4. நமது அரசர் இந்தியாவுக்கு வந்தபோது பம்பாய்க்கும் போனார். ஜனங்கள் அவரைப் பார்க்கும்படி கிட்ட நெருங்கினார்கள். சேவகர் ஜனங்களை அதட்டினார்கள்.

5. நமது ராஜா அதைக் கண்டு, ஜனங்களை அதட்டாமல் தாராளமாகப் பார்க்கவிடும்படி அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார். அவர் எவ்வளவு நல்லவர் பாருங்கள். அவரிடத்தில் நாம் அன்புடையவர்களாய் இருக்கவேண்டும். ராஜா கடவுளுடைய பிரதிநிதி என்பதை நாம் மறக்கக் கூடாது.

கடவுள் ராஜனைக் காக்க.

14. என் தாய்

1. இதோ என் அருமையான தாய். இவளே என் அன்புள்ள தாய்.

2. இவளிடத்தில் நான் மிகவும் அன்பாய் இருக்கவேண்டும். இவள் என்னிடத்தில் அன்புள்ளவளாய் இருக்கிறாள்.

3. நான் சிறு குழந்தையாக இருந்தபோது இவள் எனக்குப் பாலூட்டினாள்.

4. நான் அழும்போதெல்லாம், இவள் என்னைத் தூக்கித் தாலாட்டினாள்.

5. நான் தூங்கும்போது என் பக்கத்தி லிருந்து ஈ, எறும்பு என்னைக் கடிக்காதபடி காப் பாற்றினுள்.

6. நான் தவழவும் நடக்கவும் கற்பித்தவள் இவளே.

7. தொட்டிலிலும் கட்டிலிலும் தோள்மே லும் மார்மேலும் வைத்து என்னை முத்தமிட்ட வள் இவள்தான்.

8. எனக்கு வேண்டும்போது ஆகாரம் கொடுத் தாள். நான் சுகம் உள்ளவனுய் இருக்கிறேன்.

9. எனக்கு உடுப்பு வேண்டும்போது துணிக் கடைக்கு இட்டுக்கொண்டு போனுள். நல்ல துணி வாங்கி உடுப்புத் தைத்துக் கொடுத் தாள்.

10. நல்ல ஆபரணங்கள் இட்டு அழகு பெறச் செய்தாள். அப்பா, அம்மா, அக்கா என்று பேசக் கற்பித்தாள்.

11. ஆதலால் நான் இவ்விடத்தில் என்றும் மாருத அன்பு உடையவனுக இருக்க வேண்டும்.

உன் தாயை மறவாதே.

15. என் தகப்பன்

1. இவர் என் தகப்பன். இவரிடத்தில் நான் அன்பாய் இருக்கிறேன்.

2. இவர் என்னிடத்தில் அன்பாய் இருக்கிருர். என்மேல் பட்சம் வைத்து எனக்கு வேண்டிய எல்லாவற்றையும் கொடுக்கிருர்.

3. என்னைப் போஷிக்கும்படி இவர் வேலை செய்து கஷ்டப்படுகிருர்.

4. என் தகப்பனுர் ஒருநாள் என்னைப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துக்கொண்டுபோனுர். என்னைப் படிப்பிக்கும்படி உபாத்தியாயருக்குச் சொன்னுர். ஆகையால்தான் நான் இப்போ பள்ளிக்கூடத்தில் படிக்கிறேன்.

5. நான் பிரதிதினமும் பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டும்; வீட்டிலே கிரமமாகப் பாடத்தைப் படிக்கவேண்டும் என்று அவர் எனக்குச் சொல்லுகிருர். புஸ்தகத்தைப் போக்கடித்துவிட்டால் மறுபடியும் அவர் வாங்கிக்கொடுக்கிருர். நான் புத்திமானுக வரவேண்டுமென்பதே அவருடைய விருப்பு.

6. வீட்டில் இருக்கும்போது அநேக புத்திமதிகளை அவர் எனக்குச் சொல்லுகிருர்; தோட்டத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் செடிகளைக் காண்பிக்கிருர்; வயலிலுள்ள நெல்லைக் காண்பிக்கிருர்; கால்வாயிலுள்ள ஜலத்தைக் காண்பிக்கிருர். இவைகள் எல்லாம் எப்படி உண்டாகின்றனவென்று அவர் எனக்குப் போதிக்கிருர்.

நான் என் தகப்பனிடத்தில் அன்பாய்
இருக்கவேண்டும்

16. என் உபாத்தியாயர்

1. இதோ! படத்தைப் பார். ஓர் உபாத்தியாயர் நாற்காலியின்மேல் உட்கார்ந்து இருக்கிறார். ஒரு பையன் பலகையின்மேல் இருக்கிறான்.

2. உபாத்தியாயர் அவனுக்குப் பாடம் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

3. கிரமமாகப் பாடம் படிக்காதவர்களை உபாத்தியாயர் தண்டிப்பார்.

4. தினந்தோறும் பள்ளிக்கூடத்திற்குப் போ.

5. உன் பாடங்களைக் கிரமமாக படித்து ஒப்புவி.

6. நீ பள்ளிக்கூடத்தில் பேசவும் விளையாடவும் கூடாது.

7. உனக்குத் தெரியாதவைகளை உபாத்தியாயரிடத்தில் கேட்டு அறிந்துகொள்.

8. மற்றப் பிள்ளைகளோடு சண்டை செய்யாதே.

9. கணக்குப் போட உனக்குத் தெரியாவிட்டால் உன் தோழனுடைய கற்பலகையைப் பார்த்து எழுதாதே. இது மிகவும் தப்பிதம்.

10. கல்வியில் கண்ணும் கருத்துமாய் இருந்து தேர்ச்சி அடைய வழி பார்.

11. உன் உடம்பும் உடுப்பும் சுத்தியாக இருக்க வேண்டும்.

12. சரியான காலத்தில் பள்ளிக்கூடத்திற்குப் போ.

13. திருடுதல், பொய் பேசுதல் முதலிய கெட்ட பழக்கங்கள் உன்னிடத்தில் உண்டாகாதபடி பார்த்துக்கொள்.

உன் உபாத்தியாயருக்குக் கீழ்ப்படி.

17. பிள்ளைகளைச் சாய்ந்தாடச் செய்தல்

1. சாய்ந்தா டம்மா சாய்ந்தாடு
சாயக் கிளியே சாய்ந்தாடு
2. குத்து விளக்கே சாய்ந்தாடு
கோயிலில் பாம்பே சாய்ந்தாடு
3. சித்திரப் பாவையே சாய்ந்தாடு
செல்வ மணியே சாய்ந்தாடு

4. பச்சைக் கிளியே சாய்ந்தாடு
பவழக் கொடியே சாய்ந்தாடு
5. மயிலே குயிலே சாய்ந்தாடு
மாடப் புறவே சாய்ந்தாடு
6. சுந்தர முத்தே சாய்ந்தாடு
சொர்ணத் திலகமே சாய்ந்தாடு
7. கட்டிக் கரும்பே சாய்ந்தாடு
கண்ணின் மணியே சாய்ந்தாடு
8. கொவ்வம் பழமே சாய்ந்தாடு
கோல மணியே சாய்ந்தாடு
9. பைம்பொற் சிலையே சாய்ந்தாடு
பாலக் கொழுந்தே சாய்ந்தாடு

18. புறவும் எறும்பும்

1. ஒரு எறும்பு தண்ணீர் குடிக்கக் குளத்தின் அருகே போனது. தண்ணீர் குடிக்கும்போது அது தவறிக் குளத்தில் விழுந்துவிட்டது. அப்பால் வெளியேற அதற்குச் சக்தியில்லை.

2. ஒரு புறு இதைப் பார்த்துக்கொண்டு ஒரு மரத்தில் உட்கார்ந்து இருந்தது. அது எறும்புக்கு உதவிசெய்ய விரும்பினது.

3. உடனே அது ஒரு சுள்ளியை ஒடித்துக் குள்த்தில் போட்டது. சுள்ளி தண்ணீரில் மிதந்

தது. எறும்பு அதில் ஏறிக்கொண்டு பத்திர மாகக் கரை சேர்ந்தது.

4. இந்தச் சமயத்தில் வேடன் ஒருவன் வந்தான். அவன் புருவை எய்வதற்காக அம்பை வில்லில் வைத்துக் குறிபார்த்தான். இதை எறும்பு கண்டது. தனக்குச் சகாயம் செய்த புருவுக்கு உதவிசெய்யத் தீர்மானித்தது. அது மெதுவாக வேடனுக்குச் சமீபத்தில் போய் அவன் காலைக் கடித்தது.

5. உடனே வேடன் திடுக்கிட்டு கையை அசைத்தான். அம்பு குறி தவ்றிப்போயிற்று. இந்தச் சந்தடியில் புரு ஓடிப்போற்று. எறும்பு செய்த உதவியால் புரு உயிர் பிழைத்தது அல்லவா?

ஒருவர் செய்த நன்றியை மறவாதே.

19. நரியும் காக்கையும்

1. பசியால் வருந்தி நரி யொன்று
பதைத்துப் பதைத்து குதித் தோடி

2. வாயில் வடையைக் கௌவிக் கொண்டு
வன்னி மரத்தில் அமர்ந் திருந்த

3. காகந் தனைக்கண் டதன் கிட்டக்
கருத்தாய்ச் சென்று அதைப் பார்த்து

4. ஐயா உனைப்போல் அழகுள் ளோர்
அவனி தனில்யான் பார்த்த தில்லை



5. அழகுக் கேற்ற குர லிருந்தால்
ஆரே உனக்கு நிகரா வார்

6. எனவே காக்கை மதி மயங்கி
ஏமாந் ததுவே மோசம தாய்

7. கருநிறக் காகம் வாய் திறந்து
காகா எனவே கத் தியது

8. உடனே வடையும் நழு விற்று
ஓடிற்றே நரி தூக்கிக் கொண்டு

9 அதனல் காகம் மனம் வருந்தி
அகன்றது தன்பால் நாணுற் றே.

10. முகஸ்துதி பேசும் மாந்தர் தமை
முழுதும் வெறுத்து நீக்கிடு வீர்.



20. விளக்கும் விட்டில் பூச்சியும்

1. ஒரு மேசையின் மேல் விளக்கு எரிந்து கொண்டு இருந்தது. அவ்விளக்கின் தட்டில் ஒரு விட்டில் பூச்சி உட்கார்ந்து இருந்தது. அது தாயைப் பார்த்து 'அம்மா, இந்த விளக்கு எவ்வளவு அழகாய் எரிகிறது! கிட்டப்போகட்டுமா' என்றது.

2. தாய், 'போகவேண்டாம். போனால் எரிந்து போவாய்' என்று சொல்லிற்று. சிறு பூச்சி 'அம்மா, நீ சொல்வது சரி அல்ல; நான் ஏன் எரிந்துபோகிறேன்? அதைப்பார்த்தால் அழகிய புஷ்பம்போல இருக்கிறது. நான் போய் அதிலுள்ள தேனைக் குடித்துவிட்டு வருகிறேன்' என்று சொல்லிற்று.

3. தாய், 'மூடக் குழந்தையே! நீ நினைக்கிறபடி அது புஷ்பமல்ல, நெருப்பு; நீ அதன் கிட்டப் போனால் சாவாய். நானும் முன்னே

அப்படித் தான் நினைத்துக் கிட்டப் போய்ச் சுட்டுக்கொண்டேன்' என்று சொல்லிற்று.

4. சிறு பூச்சியோ தாயின் சொல்லைக் கேளாது விளக்கின் கிட்டப் போயிற்று. ஆ! இந்தத் தீபம் எவ்வளவு அழகாய் எரிகிறது! என் தாய் சொன்னதெல்லாம் பொய்; அந்தக் கிழவிக்கு என்ன தெரியும்?

5. இப்படிச் சொல்லிக்கொண்டு விளக்குத் தண்டில் ஏறிப் போயிற்று. 'ஆ! நான் இனிய தேனைக் குடிப்பேன்' என்று பறந்துபோய் எரிந்துகொண்டிருந்த தீபத்தின் சுவாலையில் விழுந்தது. உடனே எரிந்து இறந்தது.

பெரியோர் வார்த்தையைத் தள்ளாதே.

21. சிங்கமும் எலியும்

1. ஒரு சிங்கம் இரைதேடித் தின்றுவிட்டு, ஒரு மரத்தின் நிழலில் படுத்துக்கொண்டிருந்தது. அந்த மரத்தின் பக்கத்தில் சில வளைகள் இருந்தன. அவ்வளைகளில் வசித்த எலிகள் அதின்மேல் ஏறி விளையாடின.

2. சிங்கம் விழித்துக்கொண்டு, அவ்வெலிகளில் ஒன்றைப் பிடித்துக் கொல்லப் பார்த்தது. அப்பொழுது அவ்வெலி 'ஸ்வாமி! நானோ சிறு பிராணி. தங்கள் பலத்திற்கு நான் எம்மாத்திரம்? நான் ஒரு குழந்தையைப்போலத் தங்களிடத்தில் விளையாடினேன்! இதற்காக என்னைக் கொல்லலாமா' என்றது.



3. சிங்கம் மனது இரங்கி அந்த எலியைக் கொல்லுவது தன் கனத்திற்குக் குறைவென்று விட்டுவிட்டது. எலி உயிர் பிழைத்து ஓடிப் போயிற்று.

4. சில நாட்களுக்குப் பின் சிங்கம் இரைதேடப் போயிற்று. அப்பொழுது அது வேடன் விரித்து வைத்த வலையில் சிக்கிக்கொண்டது; தப்பிப்போக வகை தெரியாமல் தவித்தது.

5. இச்சமயத்தில் முன் சிங்கம் கொல்லாது விட்டுவிட்ட எலி அதைக் கண்டது. உடனே அது சிங்கத்தினிடத்தில் போய் 'சிநேகிதா பயப்படாதே; இதோ நான் உன்னை ஒரு நொடிப் பொழுதில் தப்புவிக்கிறேன் பார்' என்றது. பிறகு தன் இனத்தார் எல்லோரையும் அது அழைத்து வந்து பற்களால் வலையைக் கடித்துச் சிங்கத்தை விடுவித்தது.

6. சிங்கம் எலி செய்த நன்றிக்காக மிகவும் சந்தோஷப்பட்டது. அதுமுதல் சிங்கமும் எலியும் மிகவும் சிநேகமாய் இருந்தன.

ஒரு நன்றி செய்தாரை ஒருபோதும் மறவாதே.

22. அடிக்கு முத்தம்

1. இராமன் சிறு பையன். அவனுக்கு விஷமம் செய்வதில் வெகு பிரீதி. சிறுவன் ஆதலால் நல்லது எது கெட்டது எது என்று அவனுக்குத் தெரியாது. எப்பொழுதும் ஏதாவது குறும்பு செய்துகொண்டே இருப்பான்.

2. அவன் பள்ளிக்கூடத்துக்குப் போகக் கூடிய வயதுடையவன் அல்ல. வீட்டில் தொந்தரவு செய்யாமல் இருக்கும்படி தாயார் அவனை அவன் அக்காள் கண்ணம்மாளோடு பள்ளிக் கூடத்துக்கு அனுப்புவது வழக்கம்.

3. இராமன் பள்ளிக்கூடத்திற்குப் போனால் மற்றப் பிள்ளைகளைக் கிள்ளுவான், அடிப்பான்; அவர்கள் புஸ்தகங்களைக் கிழிப்பான்.

4. ஒருநாள் அவன் பள்ளிக்கூடத்தில் இருக்கும்போது கண்ணம்மாளுடைய புஸ்தகத்தைக் கிழித்தான். அவள், 'அடே! புஸ்தகத்தை என் கிழிக்கிறாய்' என்றாள். உடனே இராமன் அவளை அடித்தான்.

5. கண்ணம்மாள் அவனை அடிக்கக் கையை ஓங்கினாள். இதை உபாத்தியாயர் பார்த்துக் கொண்டு இருந்தார். கண்ணம்மா அடிக்க எத்தனிப்பது சரியல்ல என்று அவர் கண்டார்.

6. 'கண்ணம்மா! சற்றுப் பொறு! உன் தம்பி சிறுவன். அவனுக்கு என்ன தெரியும்? அவனை நீ அடிப்பது சரியல்ல' என்றார். கண்ணம்மா 'அவன் என்னை அடித்தானே, நான் சும்மா இருக்கலாமா' என்றாள். உபாத்தியாயர், 'அவன் உன்னை அடித்ததற்காக நீ அவனை முத்தியிட்டால் நலமாய் இருக்கும்' என்றார்.

7. உபாத்தியாயர் சொன்ன பிரகாரம் கண்ணம்மா தன் தம்பிக்கு முத்தமிட்டாள். இராமன் தான் செய்த தப்பிதத்திற்காக அழுதான்.

தீமைக்குத் தீமை செய்யாதே.

23. நிலாக் காட்டல்

1. சிறு பிள்ளைகளுக்கு நிலாவைக் காண்பித்துப் பராக்குக்காட்டுவது நமது தேசத்தில் வழக்கம். சிறு குழந்தைகள் அழுது தொந்தரவு செய்வதுண்டு; சில குழந்தைகள் சாப்பாடு வேண்டாமென்று அழுவதுண்டு. அச்சமயங்களில் தாய்மார் நிலாவைக் காட்டி, சில பாட்டுக்களைப் பாடிக் குழந்தைகளுடைய அழுகையை மாற்றுவார்கள்.

இவ்விதமாக நிலாவோடு பேசுவதுபோலத் தாய் மார் பாடுவது பிள்ளைகளுக்குச் சந்தோஷத்தை யும் மன உல்லாசத்தையும் கொடுக்கும்.

2. இதோ படத்தில் ஒரு தாய் தன் குழந் தையை இடுப்பில் வைத்துக்கொண்டு நிலாவைக் காட்டுவதைப் பார். அந்தக் குழந்தை பூரண சந்திரனை எவ்வளவு அவாவுடன் பார்க்கிறது பார். அப்பொழுது தாய் பின்வருமாறு நிலா வோடு பேசி அது மறுமொழி சொல்வது போலத் தானே சொல்லிக் குழந்தையை உற்சாகப் படுத்துகிருள் :—

1. நிலாவே நிலாவே, எங்கே போருய்.
2. மலையாம் குளத்து, மண்ணெடுக்கப் போ றேன்.
3. மண் என்னத்துக்கு, செப்புப் பண்ண.
4. செப்பு என்னத்துக்கு, வராகன் போட.
5. வராகன் என்னத்துக்கு, மாடு வாங்க.
6. மாடு என்னத்துக்கு, சாணி போட.
7. சாணி என்னத்துக்கு, வீடு மெழுக.
8. வீடு என்னத்துக்கு, பிள்ளை வளர்க்க.
9. பிள்ளை என்னத்துக்கு, தவழ்ந்து விளை யாட.
10. ஓலைப் பாயிலே, ஓடி விளையாட.
11. ஈச்சம் பாயிலே இருந்து விளையாட.
12. பிரப்பம் பாயிலே புரண்டு விளையாட.

24. குருவும் சீஷனும்

ஒரு குருவினிடத்தில் ஒருவன் போய், 'ஐயா என்னை உம்முடைய சீஷனாக வைத்துக்கொள்ள வேண்டும்' என்றான். அவர் அப்படியே ஆகட்டும் என்றார். பிறகு சீஷன் அவரை நோக்கி, 'ஸ்வாமி, நான் உத்தமன் ஆகவேண்டும். அதற்கு என்ன செய்வது' என்றான். குரு அவனைப் பார்த்து 'அடா, சீஷா! நீ உத்தமனாக விரும்பினால் அதிக கஷ்டப்படவேண்டும். துஷ்டன் என்று பெயர் எடுப்பது வெகு சுலபம். ஆகையால் நீ உத்தமனாக விரும்பினால் பின் வரும் பன்னிரண்டு நீதிகளையும் கவனித்து அவைகளின்படி நடக்கவேண்டும்' என்றார். சீஷன் அவை எவை என்று கேட்டான்; குரு சொல்லுகிறார் :—

1. கடவுளுக்குப் பயந்து நட.
2. அரசனுக்கு அடங்கு.
3. தாய் தகப்பனைக் கனம் பண்ணு.

4. பிறன் பொருளை இச்சியாதே
5. பொருமை கொள்ளாதே.
6. ஒருபோதும் பொய் பேசாதே.
7. களவு செய்யாதே.
8. கொலை செய்யாதே.
9. மதுபானம் செய்யாதே.
10. விபசாரம் செய்யாதே.
11. கோபம் கொள்ளாதே.
12. ஒருவரையும் பகைக்காதே.

இவைகளை நீ கவனித்து நடந்தால் உத்தமன் ஆவாய் என்ருர். சீஷன் அப்படியே நடந்து வந்தான். மிகவும் உத்தமன் என்று பேரெடுத்தான்.

25. கொக்கும் அன்னமும்

1. ஒரு கொக்கு தவளை பிடித்துத் தின்பதற்காக ஒரு குளக்கரையில் உட்கார்ந்திருந்தது. அதைக் கண்ட தவளைகள் எல்லாம் தண்ணீரில் போய் ஒளித்துக்கொண்டன.

2. கொக்கு மிகவும் விசனப்பட்டுக்கொண்டு இருந்தது. அச்சமயத்தில் ஒரு அன்னப்பட்சி அவ்வழியாகப் பறந்து வந்தது. கொக்கு அங்கே இருப்பதைக் கண்டு அதுவும் குளக்கரையில் வந்து உட்கார்ந்தது.

3. அன்னப்பட்சி கொக்கைப் பார்த்து 'நீ ஏன் இங்கே விசனமாய் உட்கார்ந்திருக்கிருய்' என்றது. கொக்கு 'எனக்கு இரண்டு மூன்று நாளாய் ஆகாரம் ஒன்றும் அகப்படவில்லை ; இந்



தக் குளத்திலுள்ள தவளைகளைப் பிடித்துத் தின்னலாமென்று இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறேன்' என்றது.

4. பிறகு கொக்கு அன்னத்தைப் பார்த்து 'நீ எங்கே போகிருய்' என்றது. அன்னம் 'நான் தெய்வ லோகத்திற்குப் போகிறேன்' என்று சொல்லிற்று.

5. கொக்கு 'தெய்வலோகம் எப்படி இருக்கும்' என்றது. 'தெய்வலோகம் பொன்போலப் பிரகாசமாய் இருக்கும்; அங்கே நமக்கு வேண்டிய எல்லாம் அகப்படும்' என்றது அன்னம்.

6. 'சரிதான், அங்கே தவளைகள் உண்டா' என்று கொக்கு கேட்டது. அன்னம், 'என்ன புத்தியீனமான பேச்சு பேசுகிருய்? தெய்வலோகத்தில் தவளைகள் கிடையாது' என்றது. கொக்கு, 'நீயே உன் தெய்வலோகத்தை மெச்சிக்கொள்;

எனக்கு அதைப்பற்றி அக்கறையில்லை' என்று சொல்லிப் பரிகாசம் பண்ணிவிட்டுப் பறந்து போயிற்று.

பன்றிகள் முத்தின் அருமை அறியுமா?



26. காகமும் குடமும்

1. தாகமாயிருந்த ஒரு காகம் தண்ணீர் குடிக்க அங்கும் இங்கும் ஓடிப் பார்த்தது. ஜலம் எங்கும் அகப்படவில்லை. அப்பால் அது ஒரு மரத்தில் உட்கார்ந்துகொண்டு என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தது.

2. பிறகு ஒரு வீட்டு முற்றத்தில் ஒரு பாத்திரம் இருப்பது அதின் கண்ணுக்குத் தென்பட்டது. உடனே அது பறந்துபோய் அப் பாத்திரத்தின் பக்கத்தில் உட்கார்ந்து பார்த்தது. அதில் தண்ணீர் பாதிவரையிலும்தான் இருந்தது. ஜலம் அதன் வாய்க்கு எட்டவில்லை.

3. காகம் தண்ணீர் குடிக்கத் தலையை உள்ளே விட்டு எட்டி எட்டிப் பார்த்தது; சாத்தியப்பட

வில்லை. பிறகு அதற்குப் பலவிதமான உபாயங்கள் மனதில் தோன்றின.

4. அது பாத்திரத்தைக் கீழே தள்ளி உடைக்க எத்தனித்தது; அதைக் கவிழ்த்துவிடலாம் என்று பார்த்தது. ஒன்றும் சரிப்படவில்லை. பிறகு அதற்கு ஒரு நல்ல உபாயம் தோன்றிற்று.

5. பாத்திரத்தின் பக்கத்தில் சிறு கற்கள் நிறைய இருப்பதை அது கண்டது. அச் சிறு கற்களை அது ஒன்றொன்றாய் எடுத்துப் பாத்திரத்திற்குள் போட்டது. கற்களைப் போடப் போடத் தண்ணீர் மேலே எழும்பிற்று. காகம் தன் தாகம் தீரத் தண்ணீர் குடித்துவிட்டுப் பறந்துபோயிற்று.

எவ்வித கஷ்டம் நேரிட்டாலும் நாம் சோர்வு அடையக்கூடாது; நன்றாய் யோசித்தால் ஏதாவது உபாயம் புலப்படும். அவ்வுபாயத்தினால் நாம் நமது கஷ்டத்தை நீக்கிக்கொள்ளலாம்.

புத்திமான் பலவான்.

27. பொம்மைக் கல்யாணம்

1. இந்தப் படத்தில் அநேக சிறு பெண்கள் கும்பலாக உட்கார்ந்திருப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். அவர்கள் பள்ளிக்கூடத்தில் படிக்கிற பெண்கள் போலக் காணப்படுகிறார்கள்.

2. அவர்களில் ஒரு பெண் தட்டில் ஏதோ வைத்துக்கொண்டு மற்றப் பெண்களுக்குக்

கொடுக்கிறாள். அவர்களுக்கு முன்னே ஒரு சிறிய பந்தல் போடப்பட்டு இருக்கிறது. அந்தப் பந்தல் வாழை, மாவிலை, தோரணம் முதலியவற்றால் சிங்காரிக்கப்பட்டு இருக்கிறது.

3. இவை எல்லாவற்றையும் பார்க்கும்போது இது என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? பந்தலுக்குள் இரண்டு சிறு பொம்மைகள் இருக்கின்றன அல்லவா? ஆகையால் இது ஒரு பொம்மைக் கல்யாணம் என்று தோன்றுகிறது.

4. நமது தேசத்தில் சிறுமிகள் பலர் சேர்ந்து இப்படிப்பட்ட கல்யாணம் செய்வது வழக்கம். இரண்டு பொம்மைகளைக் கல்யாணப்பெண் கல்யாணப்பிள்ளை என்று வைத்துக்கொண்டு, சாதாரணமான கல்யாணத்தைப் போலவே அவர்கள் நடத்துவார்கள்.

5. பணக்காரராக இருக்கிற பெற்றார் இக்கல்யாணங்களில் அதிக பணம் செலவுசெய்வதுண்டு. இவ்வித கல்யாணங்களினால் பிள்ளைகளுக்கு விளையாட்டும் உற்சாகமும் உண்டாகிறது. அவர்கள் கல்யாண காலங்களில் எவ்விதமான

சடங்குகள் நடக்கின்றன என்பதை அறிகிறதற்கும் ஏதுவாகிறது.

சில பிள்ளைகள் பொம்மைக் கலியாணம் செய்வதற்கு வேண்டிய வஸ்துக்களைச் சேகரித்துக் கொடுக்கும்படி பெற்றோரைத் தொந்தரவு செய்வதுண்டு. பின்வரும் பாடல், ஒரு சிறுபெண் பொம்மைக் கல்யாணம் செய்வதற்குத் தனக்கு ஆடை ஆபரணம் வாங்கிக் கொடுக்கும்படி தாயைக் கேட்பதைக் குறிக்கிறது :—

'பொம்மைக் கலியாணம் புரியவே வேண்டும்
கம்மல் ஜிமிக்கி கைக்குப் பொன் காப்பு
செம்மைப் பட்டாடை சிவப்புச் சிற்றாடை
அம்மா நீவாங்கி அளிப்பாய் எனக்கே.'

28. சோம்பேறிப் பையன்

1. காக்கை யேநீ எங்கே போருய்
கடுக விளை யாட வாராய்
நான் வரவே மாட்டேன் அப்பா
நான் ஒரு கூடு கட்ட வேண்டும்

2. நாயே நாயே எங்கே போருய்
நாடி என்னுடன் ஆட வாராய்
நான் வரவே மாட்டேன் அப்பா
நான் போய் வீடு காக்க வேண்டும்

3. எறும்பே எறும்பே எங்கே போருய்
என்னுட னேநீ ஆட வாராய்
நான் வரவே மாட்டேன் அப்பா
நான் போய் வீடு கட்ட வேண்டும்

4. தேனீ தேனீ எங்கே போருய்
தேர்ந்து என்னுடன் ஆட வாராய்
நான் வரவே மாட்டேன் அப்பா
நான் போய்த் தேனைச் சேர்க்க வேண்டும்

5. ஐயோ எனக்குப் புத்தி வந்தது
ஆரும் ஆட மாட்டேன் என்ருர்
நானும் இதோ வீடு சென்று
நன்ருய் வேலை செய்து வருவேன்

6. என்று ஓடிப் போனுன் பையன்
இன்பமாய்ப் பாடம் படித்தொப் பித்தான்
பரிசுகள் பெற்றுத் தேர்ச்சி அடைந்தான்
பாங்காய்ச் சிறுவன் கீர்த்தி பெற்ருன்.

29. கிளிப் பாடல்

1. அரச மரத்துக்கிளி
ஆசாரம் பேசுங்கிளி
பாலன்வடி வேலன்கிளி
பாடுதுபார் ஆடுதுபார்
எல்லோரும் பாருங்களே!
வாருங்களே.

2. புன்னை மரத்துக்கிளி
புதுமைமெத்தப் பேசுங்கிளி
மன்னன் வளர்த்தகிளி
மாண்பாகப் பாடுதுபார்
எல்லோரும் பாருங்களே!
வாருங்களே.

3. பாக்கு மரத்துக்கிளி
பதங்கள்மெத்தப் பாடுங்கிளி
வாக்கிற் சிறந்தகிளி
மகிழ்வாக ஆடுதுபார்
எல்லோரும் பாருங்களே!
வாருங்களே.

4. பூங்கா வனத்துக்கிளி
புலவரைப்போல்பேசுங்கிளி
பாங்காய் வளர்த்தகிளி
பாடுதுபார் ஆடுதுபார்
எல்லோரும் பாருங்களே!
வாருங்களே.

TB
031,3(1)
N24

30. மங்களம்

1. மங்களமே, சுப மங்களமே
மன்னன் ஜார்ச்சுக்கு மங்களமே.

2. எங்கள் ராணிக்கு மங்களமே
இன்பமாய் வாழ்ந்திட மங்களமே.

3. ராச குமாரர்க்கு மங்களமே
தேசம் செழித்திட மங்களமே.

4. அரச குமாரிக்கு மங்களமே
அன்பாய் வாழ்ந்திட மங்களமே.

5. ஆங்கில அரசுக்கு மங்களமே
ஆண்டு நடத்திடும் மங்களமே.

6. மங்களமே, சுப மங்களமே
மானிலம் ஓங்கிட மங்களமே.

85220

C. L. S, PRESS, MADRAS—1924